செ.வெ.எண்: 29 நாள்:13.09.2021

# பத்திரிக்கைச் செய்தி

இந்தியத் தேர்தல் ஆணைய கடித எண்.23/ID/2021–ERS, நாள்:22.06.2021–இல் அனைத்து மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளும் வாக்காளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் மேற்கண்ட அறிவுரையினை செயல்படுத்திடும் விதமாக கரூர் மாவட்டத்திலுள்ள 7 அரசு இ–சேவை மையங்களில் ( கரூர், அரவக்குறிச்சி, மண்மங்கலம், கிருஷ்ணராயபுரம், குளித்தலை, கடவூர் வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்) மாற்று புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் தேவைப்படும் வாக்காளர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் 01.10.2021 முதல் நடைமுறைக்கு வரும். எனவே, அனைத்து வாக்காளர்களும் இச்சேவையை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.**த.பிரபுசங்கர்,இ.ஆ.ப.,** அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.